டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 124 | Madurai | Online Edition

வங்கக்கடலில் உருவாகிறது 'அக்வான்' புயல்! தமிழகத்தில் மழைக்கான வாய்ப்பு உண்டா?

சென்னை, நவ.14

மத்திய அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவு பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல சுழற்சி காரணமாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று (சனிக்கிழமை) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாகவும், இன்று (ஞாயிற்றுக்கிழமை) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது.

இது மேலும் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக் கடல் பகுதியில் நாளை புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியுடன் தொடர்புடைய வளிமண்டல சுழற்சியில் இருந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் வழியாக மாலத்தீவின் வடக்கு பகுதிகள் வரை காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்றும், நாளையும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழகம், வட கடலோர தமிழகத்தின் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை மையம் கூறி இருந்தது.

இந்நிலையில் தென் கிழக்கு வங்கக்கடலில் நவ.13ல் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது வடமேற்குத் திசையில் நகர்ந்து, காற்றழுத்தத் தாழ்வுப் மண்டலமாக வலுப்பெற்று, நவம்பர் 16-ம் தேதி மாலை மத்திய வங்க கடல் பகுதியில் புயலாக (அக்வான் புயல்) மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

விவசாய அடையாள எண் பதிவு சிறப்பு முகாம்

புதுக்கோட்டை, நவ.14

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டாரம், ஆதனக் கோட்டை கிராமத்தில் நடைபெற்ற விவசாய அடையாள எண் பதிவு முகாம் குறித்து புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) அபிநயா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,



விவசாயிகள் அனைவரும் தங்களது ஆதார் எண்ணுடன் நில விவரங்களை இணைத்து விவசாய அடையாள எண்ணை பதிவு செய்திடவும், ஏற்கனவே பதிவு செய்த விவசாயிகள் தங்களது அனைத்து நில உட்பிரிவு எண்களையும் இணைக்க கேட்டுகொள்ளப்படுகிறது எனவும், விவசாய அடையாள எண் பதிவு செய்தால் மட்டுமே மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு வேளாண் நலத்திட்டங்கள், மானியங்கள், பயிர் காப்பீடு மற்றும் பாரத பிரதமரின் விவசாயிகள் கௌரவ ஊக்கத்தொகை நிதி திட்டத்தின் கீழ் தவணைத்தொகைகள் தொடர்ந்து பெற இயலும். மேலும் அனைத்து நில உட்பிரிவுகளையும் இணைத்தால் மட்டுமே தங்களுக்கு தகுதியான அளவு உரங்கள், உர விற்பனை நிலையங்களிலிருந்து பெற இயலும்.

விவசாய அடையாள எண் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் ஆதார் எண். கணிணி சிட்டா, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண்ணுடன் பதிவு செய்ய தவறிய விவசாயிகள் உடனே அருகில் உள்ள பொது சேவை மையம் அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் தங்கள் பகுதி உதவி வேளாண்மை/தோட்டகலை அலுவலர் களை அணுகி விவசாய அடையாள எண் பெற்று பயன் பெறுமாறு புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தாவர நாற்றங்கால் உதவியாளர் பயிற்சி நிறைவு விழா



கன்னியாகுமரி, நவ.14 கன்னியாகுமரி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கடந்த 12ஆம் தேதி முதல் அரசு பள்ளி மாணவர்களுக்கு தாவர நாற்றங்கால் உதவியாளர் பயிற்சி நடைபெற்று வந்தது.

பயிற்சியின் துவக்க நாள் அன்று தோட்டக் கலை துணை இயக்குநர் வ.ஸ.நக்கீரன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியினை துவங்கி வைத்தார். பயிற்சியின் கடைசி நாளான 6-11-26ல் நிறைவு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ், அரசு பள்ளி மாணவர் களுக்கு நிறைவு உரையாற்றினார்.

தனது நிறைவு உரையில் மாணவர்கள் கற்றுக் கொண்ட தொழில்நுட்பங்களை பயன் படுத்தி சிறந்த தொழில் முனைவோராக மாற வேண்டும் என கூறினார். தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஞா.சாம்லின்ட் சுஜின் நன்றி உரை ஆற்றினார். வேளாண் அறிவியல் நிலைய வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிகழ்ச் சியில் கலந்து கொண்டனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி குறித்த கருத்துக் களை பகிர்ந்து கொண்டனர்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

ராபி பருவ சாகுபடிக்கு காப்பீடு செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுரை!

விருதுநகர், நவ.14

விருதுநகர் மாவட்டத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2026-27 ராபி பருவத்தில் சம்பா-நெல் II, மக்காச்சோளம், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் உடனடியாக காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு சாத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுரை வழங்கியுள்ளார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) 2016-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் இந்த ஆண்டு (2026-27) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட். மூலம் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ராபி பருவத்தில் (அக்டோபர் முதல்) பயிர் செய்யவுள்ள பயிர் களுக்கு விவசாயிகள் அனைவரும் வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ, பொது சேவை மையங்கள் (Common Service Centres(CSC)) மூலமாகவோ பயிர்களை காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வேளாண் பயிர்களுக்கு பயிர் காப்பீடு கட்டணம் ஏக்கருக்கு சம்பா - நெல் பயிருக்கு ரூ.270/- எனவும், மக்காச்சோளம் பயிருக்கு ரூ.350/- எனவும், சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.144/- எனவும், கம்பு பயிருக்கு ரூ.165/- எனவும், பாசி பயருக்கு ரூ.249/- எனவும், உளுந்து இது வரை பயிர்களுக்கு ரூ.277/- எனவும், பருத்தி பயிருக்கு ரூ.511/- எனவும், நிலக்கடலை பயிருக்கு ரூ.323 எனவும், எள் பயிருக்கு ரூ.134/- எனவும் மற்றும் சூரியகாந்தி பயிருக்கு ரூ.193/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் கடைசி நேர தாமதத்தை தவிர்த்து உடனடியாக பயிர் காப்பீடு செய்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் காப்பீடு கட்டணம் ஏக்கருக்கு கொத்தமல்லி பயிருக்கு ரூ.588/- எனவும், மிளகாய் பயிருக்கு ரூ.1121/- எனவும், வெங்காயம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.1591/-

எனவும், வாழை பயிருக்கு ரூ.4471/- எனவும் தெரிவிக்கப் படுகிறது.

விருதுநகர் மாவட்டத்தில்ல 2026-27 ஆம் ஆண்டின் நடப்பு ராபி பருவத்தில் பயிர் காப்பீடு பயிர் காப்பீடு பதிவு செய்ய கடைசி நாள் உளுந்து மற்றும் பாசிப்பயறு வகைகளுக்கு 30.11.26 எனவும், மக்காச்சோளம், கம்பு, துவரை மற்றும் பருத்தி பயிர் களுக்கு 15.12.26, சம்பா - நெல் II மற்றும் சோளம் பயிருக்கு 16.12.26, நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு 30.12.26 எனவும் மற்றும் எள் பயிருக்கு 01.02.27 வரையிலும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் காப்பீடு பதிவு செய்ய கடைசி நாள் கொத்தமல்லி பயிருக்கு 18.01.27 எனவும் மிளகாய் வெங்காயம் பயிர்களுக்கு 01.02.27 எனவும், மற்றும் வாழை பயிர்களுக்கு 01.03.27 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை, வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank Pass Book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவை மையங்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் எதிர்பாராமல் ஏற்படும் இயற்கை பேரிடர்களையும், பூச்சி நோய் தாக்குதலால் ஏற்படும் இழப்பு உள்ளிட்ட பல்வேறு காரணிகளையும் கருத்தில் கொண்டு தங்களது பயிர்களுக்கான காப்பீடை (Crop Insurance) அருகிலுள்ள பொதுச் சேவை மையங்களிலோ (CSC) தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ (PACCS) அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ உரிய காப்பீடு கட்டணம் (Premium) செலுத்தி தங்களது பயிர்களை காப்பீடு செய்து பயன் அடையுமாறு சாத்தூர், வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

வரலட்சுமி சாகோ ஃபுட்ஸ் (Varalakshmi Sago Foods Pvt. Ltd.) நிறுவனத்திற்கு களப்பயணம்



சேலம், நவ.14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவிகள், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில், தங்கி இருந்து ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் அமைந்துள்ள வரலட்சுமி சாகோ ஃபுட்ஸ் நிறுவனத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

இப்பயணத்தின்போது மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஜவ்வரிசி மற்றும் மரவள்ளி மாவு (Starch) தயாரிக்கும் பல்வேறு செயல் முறைகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். மூலப் பொருட்களைப் பெறுதல், சுத்தம் செய்தல், மாவுச்சத்தைப் பிரித்தெடுத்தல், பதப்படுத்துதல், உலர்த்துதல், தரம் பிரித்தல் மற்றும் பொட்டலமிடுதல் போன்ற உற்பத்தி நிலைகளைப் பார்வையிட்டு விளக்கங்களைப் பெற்றனர்.

மேலும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதன் முக்கியத்துவம், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் முறைகள் மற்றும் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புகள் குறித்தும் தெரிந்துகொண்டனர். இக்களப்பயணம் மூலம் வேளாண் விளைபொருட்களின் மதிப்புக்கூட்டுதல், உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்புகள் குறித்து மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!



மதுரை, நவ.14

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, 13.11.26 (வெள்ளிக்கிழமை) அன்று திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்திற்கு உட்பட்ட கன்னி வாடியில் மக்காச் சோளப் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (Integrated Pest Management – IPM) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் மாணவர்களான விஷ்ணு ம., வினோத் குமார் சு., விக்னேஸ்வரன் இரா.ஜெ., தீபக்முருகன் வே., அரவிந்த், ராகுல் அ., லிங்கேஷ்வரன் ச., மோதிலால் வெ. மற்றும் பார்த்திபன் கிருஷ்ணா சி. ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினர்.

மாணவர் விக்னேஸ்வரன் இரா.ஜெ., மக்காச்சோளப் பயிரின் முக்கிய வளர்ச்சிப் பருவங்களான ஆரம்ப வளர்ச்சி, பூக்கும் பருவம் மற்றும் கதிர் உருவாகும் பருவம் ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவற்றில் மேற்கொள்ள வேண்டிய பயிர் மேலாண்மை முறைகள் குறித்து விளக்கினார்.

மாணவர் வினோத் குமார் சு., படைப்புழு (Fall Armyworm), தண்டுத் துளைப்பான் உள்ளிட்ட மகசூல் இழப்பை ஏற்படுத்தும் முக்கிய பூச்சிகள், அவற்றின் தாக்குதல் அறிகுறிகள், சேதப் படுத்தும் முறைகள் மற்றும் கட்டுப்பாட்டு உத்திகள் குறித்து எடுத்துரைத்தார்.

மாணவர் விஷ்ணு ம., வேப்பம் சார்ந்த தாவரப் பூச்சிக் கொல்லிகள், இயற்கை பூச்சி விரட்டிகள் மற்றும் உயிரியல்

கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கினார். மேலும், இயற்கை இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

மாணவர் மோதிலால் வெ., படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதில் அணுக்கரு பல்கூட்டுப் புரத நச்சுநோய் வைரஸ் (Nuclear Polyhedrosis Virus – NPV) பயன்பாடு மற்றும் அதன் செயல்பாட்டு முறைகள் குறித்து விளக்கினார். மேலும், மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் அதன் அடிப்படையில் உரமிடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

மேலும், இனக்கவர்ச்சிப் பொறிகள் அமைத்தல், பறவைத் தாங்கிகள் நிறுவுதல், வயல் கண்காணிப்பு மற்றும் பரிந்துரைக் கப்பட்ட பூச்சிக்கொல்லிகளைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் மக்காச்சோளத்தில் பூச்சித் தாக்கு தலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், உயிரியல் மற்றும் தாவர அடிப்படையிலான கட்டுப்பாட்டு முறைகளைப் பயன் படுத்துதல், மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நிலையான முறையில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்



கூகலூர் மாதிரி கிராமத்தில் மண் வள விழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சிக் கூட்டம்



ஈரோடு, நவ.14

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கூகலூர் மாதிரி கிராமத்தில், கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனம் மற்றும் வேளாண்மைத் துறை, ஈரோடு இணைந்து 13.11.26 அன்று மண் வள விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயிகள் பயிற்சிக் கூட்டத்தை நடத்தின.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு வேளாண்மைத் துறையின் நடமாடும் மண்பரிசோதனை ஆய்வகத்தின் மூத்த வேளாண்மை அலுவலர் டாக்டர் பி.ஷாலினி, தனது சிறப்பு உரையில் மண்பரிசோதனையின் அவசியம், மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், பயிர்களுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள், மண்ணின் அங்கக கரிமப் பொருள் (Organic Carbon) மற்றும் மண் வளத்தைப் பாது காப்பதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரமிடு வதன் மூலம் தேவையற்ற உரச் செலவைக் குறைத்து, சாகுபடி செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் எடுத்துரைத்தார்.

கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தின் ஈரோடு வேளாண்மை அலுவலர் என்.சோணைமுத்து, குரோமோர் நானோ டிஏபி (Gromor Nano DAP) உரத்தின் ஊட்டச்சத்துக்கள், சிறப்பம் சங்கள், நன்மைகள் மற்றும் பல்வேறு பயிர்களில் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும், குரோ மோர் நியூட்ரிக் கனெக்ட் செயலி (Gromor Nutric Connect App) மற்றும் ட்ரோன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நவீன வேளாண் சேவைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு RAWE மாணவர்கள், மண் மாதிரி சேகரிக்கும் செய்முறை விளக்கம், மண் வள மேலாண்மை, மண்ணின் தன்மை (Soil Texture), மண்ணின் கட்டமைப்பு (Soil Structure) மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

ஜே.கே.கே.முனிராஜா வேளாண்மை கல்லூரியின் இறுதியாண்டு RAWE மாணவர்கள், மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் மண் பரிசோதனை பரிந்துரை களின் அடிப்படையில் உரமிடுவதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு வேளாண்மைத் துறையின் மூத்த வேளாண் அலுவலர் டாக்டர் பி.ஷாலினி, கூகலூர் உதவி தோட்டக் கலை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு RAWE மாணவர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

மண் வளத்தைப் பாதுகாத்து, மண் பரிசோதனை அடிப்படை யிலான உர மேலாண்மையைப் பின்பற்றி, நிலையான மற்றும் இலாபகரமான வேளாண்மையை மேம்படுத்துவதே இம்முகாமின் முக்கிய நோக்கமாகும்.



தமிழகத்தில் எருமை பால் உற்பத்தியை மேம்படுத்த சிறப்பு திட்டம் - தெரியுமா?



தமிழகத்தில் 2026-2027ஆம் ஆண்டிற்கான கால்நடை பாரமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது எருமைகளின் இனப்பெருக்க திறனை மேம்படுத்த சிறப்பு திட்டம் 204 கோடி மதிப்பில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் எருமைகளின் இன்றைய நிலவரம் தெரியுமா?

ஒரு காலத்திலே பட்டி தொட்டிகளில் எருமைகள் நிறைய காணப்பட்டன. இன்றைய நிலையில் மிகவும் அரிதாக உள்ளது. 20வது கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழக முழுவதுமாக 95 லட்சம் கால்நடைகள் உள்ளதாக தரவுகள் உள்ளன. இதில் 5.18 லட்சம் தான் எருமை மாடுகள் (BUFFALO) உள்ளன. நாட்டின் மொத்த எருமை தொகையில், தமிழகத்தின் பங்கு 5.29%யிலிருந்து 0.72% மிகவும் குறைந்த உள்ளது. இதை விட பால் உற்பத்தியும் 4.01%யில் வெறும் 0.46% குறைந்துள்ளது.

எனவே தமிழகத்தில் எருமை பெருக்கம் மற்றும் பால் உற்பத்தியை மேம்படுத்தவும் எருமை வளர்ச்சிக்கான தீவிர திட்டங்கள் செயல்படுத்துவது தற்போதைய கால கட்டத்தில் அவசியமான தேவையாகும்.

சிறப்பு திட்டத்தின் செயல்பாடுகள் எப்படி?

தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு 100 எருமை கிடாரிகள், 100 சினை எருமைகள், கொண்டு எருமை இனப்பெருக்க திறன் மேம்படுத்தபட உள்ளது. எருமைகளுக்கு அடர்தீவனம், சினை எருமை களுக்கு, தீவனம் மற்றும் கிடாரி சினை எருமைகளுக்கு தாது உப்பு கலவை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட கிடாரிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப் பட்டு, ஆரம்ப எடை அளவிடப்படும். கால்நடைகளின் ஆரோக் கியம் பரிசோதனை செய்யப்படும்,

6 மாதங்களுக்கு தினமும் 2 கிலோ அடர் தீவனம், ஒரு மாதத்திற்கு ஒரு தாது உப்பு கலவையும் வழங்கப்படும். வாரந் தோறும் எருமை கிடாரிகளின் எடை அதிகரிப்பு பரிசோதனை செய்யப்படும். இதன் மூலமாக சினைபிடிக்கும் விதம் மற்றும் உற்பத்தி திறன் உயர்ந்து மறைமுக பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

எருமையை வளர்ப்போம். பால் உற்பத்தியில் சாதனை படைப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

விதைபரிசோதனை நிலையத்தில் திடீர் ஆய்வு



காஞ்சிபுரம், நவ.14

காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையத்தினை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை துணை இயக்குநர்) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையத்தின் விதைப் பரிசோதனை அலுவலர் இளையராஜா விதைகளின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரக கலப்பு ஆகிய பரிசோதனை செயல்பாடுகளின் முக்கியத்துவத்தினை எடுத் துரைத்தார். மேலும், இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை துணை இயக்குநர்) விதையின் தரத்தினை உறுதி செய்தார்.

விதைப்பரிசோதனை முடிவுகளை தெரிந்து தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவும் அதன் மூலம் அதிக மகசூல் பெற்று நல்ல வருவாய் பெறவும் விதைப்பரிசோதனை நிலையத்தை பயன்படுத்திக் கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர் பாலபாரதி உடன் இருந்தார்.

குண்டூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு செயல்விளக்கம்!



சேலம், நவ.14

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் உள்ள குண்டூர் கிராமத்தில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு குறித்த செயல்விளக்கத்தை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், மண்ணின் வளத்தை அறிந்து அதற்கேற்ப உர மேலாண்மை செய்வதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இதன் ஒரு பகுதியாக, மண் மாதிரி சேகரிப்பதற்கான சரியான இடத்தைத் தேர்வு செய்தல், மண் மாதிரி எடுக்கும் ஆழம், மாதிரி சேகரிக்கும் முறை மற்றும் தேவையான கருவிகள் குறித்து மாணவர்கள் விளக்க மளித்தனர்.

மேலும், வயலில் சீரான முறையில் பல இடங்களில் மண் மாதிரிகளைச் சேகரித்து, அவற்றை நன்கு கலந்து பிரதிநிதித்துவ மண் மாதிரியைத் தயாரிக்கும் முறையும் விவசாயிகளுக்கு செயல்விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை முறையாகப் பெயரிட்டு, ஆய்வகத்திற்கு அனுப்பு வதற்கான நடைமுறைகளும் விளக்கப்பட்டன.

மண் பரிசோதனையின் மூலம் மண்ணில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் நிலையை அறிந்து, பயிர்களுக்குத் தேவையான உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்த முடியும் என்பது குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளின் நேரடிப் பங்கேற்புடன் நடைபெற்ற இச்செயல்விளக்கம், மண் வளத்தைப் பாதுகாத்தல், உரச் செலவைக் குறைத்தல் மற்றும் நிலையான பயிர் உற்பத்தியை மேம்படுத்துதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நஞ்சில்லா உணவு உற்பத்தியில் இயற்கை வேளாண்மையின் பங்கு

முன்னுரை



உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். இன்றைய காலகட்டத்தில் அதிக உணவு உற்பத்திக்காக ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் மண், நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இப்பிரச்சினைகளைக் குறைத்து பாதுகாப்பான உணவு உற்பத்தி செய்ய இயற்கை வேளாண்மை மிகவும் அவசியமாகிறது.

இயற்கை வேளாண்மை என்றால் என்ன?

இயற்கை வேளாண்மை என்பது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாய முறையாகும். இதில் தொழுஉரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம், உயிர் உரங்கள் மற்றும் இயற்கை பூச்சி மேலாண்மை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நஞ்சில்லா உணவு என்றால் என்ன?

நஞ்சில்லாஉணவு என்பது உணவில் தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் எச்சங்கள் மற்றும் பிற மாசுபாடுகள் பாதுகாப்பான அளவை மீறாமல் உள்ள உணவைக் குறிக்கிறது. இத்தகைய உணவு உற்பத்திக்கு இயற்கை வேளாண்மை ஒரு முக்கியமான வழிமுறையாகும்.

இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தப்படும் உரங்கள்

1. தொழு உரம் : கால்நடைகளின் சாணம் மற்றும் சிறுநீர் போன்ற வற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது மண்ணின் வளத்தை மேம்படுத்துகிறது.

2. மண்புழு உரம் : மண்புழுக்களின் உதவியுடன் மக்கும் கழிவு களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது பயிர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

3. பசுந்தாள் உரம் : தக்கைப்பூண்டு, சணப்பை போன்ற பயிர் களை மண்ணில் மடக்கி உழுவதன் மூலம் மண்ணில் கரிமப் பொருட்கள் அதிகரிக்கின்றன.

4. உயிர் உரங்கள் : அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர் உரங்கள் பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் கிடைக்க உதவுகின்றன.

நஞ்சில்லா உணவு என்றால் என்ன?

இயற்கை பூச்சி மற்றும் நோய் மேலாண்மை இயற்கை வேளாண்மையில் ரசாயன பூச்சிக்கொல்லிகளுக்குப் பதிலாக பாதுகாப்பான மாற்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. வேப்ப எண்ணெய் மற்றும் வேப்பம் சார்ந்த தயாரிப்புகள், மஞ்சள் மற்றும் நீலஒட்டும் பொறிகள், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், பயிர் சுழற்சி முறை, நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர் ரகங்கள்.

இந்த முறைகள் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தைக் குறைக்க உதவுகின்றன. நஞ்சில்லா உணவு உற்பத்தியில் இயற்கை வேளாண்மையின் பங்கு ரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்கிறது.

இயற்கை வேளாண்மையின் பொருளாதார முக்கியத்துவம்

இயற்கை வேளாண்மையில் பண்ணையிலேயே கிடைக்கும் சாணம், இலைதழைகள் மற்றும் பயிர்க் கழிவுகளை உரமாகப் பயன்படுத்தலாம். இதனால் வெளியில் இருந்து வாங்கும் சில இடுபொருட்களின் செலவைக் குறைக்க முடியும். இயற்கை விளைபொருட்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

இயற்கை வேளாண்மையில் உள்ள சவால்கள் ஆரம்ப காலத்தில் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இயற்கை உரங்களைத் தயாரிக்க அதிக நேரம் தேவை. பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் கூடுதல் கவனம் தேவை.

முடிவுரை

நஞ்சில்லா உணவு உற்பத்தி என்பது இன்றைய காலத்தின் முக்கியத் தேவையாகும். இயற்கை வேளாண்மை மண்ணின் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதோடு, பாதுகாப்பான உணவு உற்பத்திக்கும் உதவுகிறது. எனவே விவசாயிகள் இயற்கை வேளாண்மை முறைகளைப் பின்பற்றி ஆரோக்கியமான சமுதாயத்தையும் வளமான எதிர்காலத்தையும் உருவாக்க வேண்டும்.

தகவல் : ***ஜே.அன்புசெல்வன், இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை மாணவி, வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், NMV பல்கலைக்கழகம், அருப்புக்கோட்டை – 626101, விருதுநகர் மாவட்டம்.***

நீர்வளத்தில் புதிய வருமானம் மீன் வளர்ப்புப் பண்ணையில் வேளாண் மாணவிகள் களப்பயணம்!





திருச்சி, நவ.14

திருச்சி மாவட்டம், குமுளூரில் அமைந்துள்ள வேளாண்மை கல்வி நிறுவனத்தின் (Institute of Agriculture) வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்று வரும் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் ஆஃப்ரீன் பானு M, ஆர்த்திராஜ், அபர்ணாதேவி P, அபிநயா A, அக்ஷயா சுந்தர மூர்த்தி, அமராவதி மணிவேல், அனுபா ஸ்ரீ ராஜமாணிக்கம், அர்ப்பனா மார்சினாம், ஆர்த்தி K, அதிசயாபேபி A, தீப்திலதாசா Ú, ஏக்தாஆனந் ஆகியோர் மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள நிக்சனின் மீன் வளர்ப்புப் பண்ணைக்கு கள பயணம் மேற் கொண்டனர். நிக்சன், மீன் வளர்ப்பிற்கான குளம் அமைக்கும் முறைகள், மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல், மீன்களுக்குத் தீவனமளிக்கும் முறைகள், நீரின் தரத்தைப் பராமரித்தல், மீன்களின் வளர்ச்சி நிலைகள் மற்றும் நோய்த் தடுப்பு மேலாண்மை முறைகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், மீன் வளர்ப்பின் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய வருமான வாய்ப்புகள், மீன் வளர்ப்பில் உள்ள சவால்கள் மற்றும் நவீன மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்தும் மாண வர்கள் கேட்டறிந்தனர். மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துரை யாடி, மீன் வளர்ப்புத் தொழிலின் நடைமுறை அனுபவங்களை நேரில் அறிந்து கொண்டனர். இத்தகைய களப்பயணம் மூலம் வகுப்பறையில் கற்ற வேளாண்அறிவியலை நடைமுறையில் புரிந்து கொள்ளவும், விவசாயம் சார்ந்த பல்வேறு தொழில் முனைவோர் வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் மாணவர் களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் RAWE மாணவர்களுக்குத் தென்னை சாகுபடி மற்றும் நோய் மேலாண்மைப் பயிற்சி!

தஞ்சாவூர், நவ.14

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிற்சி மேற்கொண்டு வரும் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், வேப்பங்குளத்தில் அமைந்துள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்திற்கு கல்வி சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.





அங்கு நடைபெற்ற முதல் அமர்வில், டாக்டர் நா.செந்தில்குமார், இணைப்பேராசிரியராக (வேளாண்யியல்), ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கங்கள், முக்கியப் பணிகள், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையத்தால் வெளியிடப்பட்ட தென்னை ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்கள் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து, டாக்டர் மு.சுருளிராஜன், இணைப் பேராசிரியர் (தாவர நோயியல்), தென்னையில் ஏற்படும் அடிமர அழுகல்/கனோடெர்மா வாடல் நோய், குருத்தழுகல் நோய், இலைக்கருகல் நோய் மற்றும் கேரளா வாடல் நோய் ஆகிய முக்கிய நோய்களின்அறிகுறிகள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத் தார். மேலும், ஹெக்சகோனசோல் மூலம் வேர் வழி மருந்து செலுத் துதல், போர்டோ கலவை பயன்படுத்துதல் மற்றும் டிரைக்கோ டெர்மாவிரிடி, பேசில்லஸ்சப்டிலிஸ் போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை மண்ணில் இடுதல் ஆகிய முறைகள் குறித்த செயல்விளக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, டாக்டர் எஸ்.ஷீபா ஜாய்ஸ் ரோஸ்லீன், உதவிப்பேராசிரியர் (பூச்சியியல்), தென்னந்தோப்பில் தேனீ வளர்ப் பின் செயல்பாடுகள், தேனீக்கூட்டின் சட்டங்களை கையாளும் முறைகள் மற்றும் தேனீக்கூட்டின் ஆரோக்கியத்தை ஆய்வு செய் யும் வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

மேலும், தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன்வண்டு, எரியோஃபைட் சிலந்திப்பேன் மற்றும் சுருள் வெள்ளை ஈ ஆகிய முக்கியப் பூச்சிகள் குறித்து விளக்கினார். இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய பூச்சிக்கொல்லி மருந்துகளை வேர் வழியாகச் செலுத்துதல், கிரைசோபெர்லா (Chrysoperla) போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துதல், மஞ்சள் ஒட்டும் பொறி மற்றும் வாளிப் பொறி அமைத்தல் ஆகிய ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்தும் செயல் விளக்கம் அளித்தார்.

இப்பயணத்தின் மூலம் மாணவர்கள் தென்னை சாகுபடி, நோய் மேலாண்மை, உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் தேனீ வளர்ப்பு தொடர்பான நடைமுறை அறிவைப் பெற்றனர். பயிற்சியில் பெற்ற தொழில்நுட்ப அறிவை, தங்களது வரவிருக்கும் RAWE திட்டத்தின் போது விவசாயிகளிடம் கொண்டு சேர்த்து, வயல்வெளி யில் செயல்படுத்துவதற்கு இப்பயணம் பயனுள்ளதாக அமைந்தது.

பனை விதை நடவுப் பணியை மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



தென்காசி, நவ.14

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் அமைந்துள்ள S.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரி (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது) இறுதியாண்டு மாணவர்கள், ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்திற் குட்பட்ட நாச்சியார்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கான செயல்விளக்க முகாம் மற்றும் பனை விதை நடவுப் பணியை மேற்கொண்டனர்.

இம்முகாமில், பருத்தி சாகுபடியில் மகசூலை அதிகரிப்பதற்கும், விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் மேற்கொள்ள வேண்டிய நவீன விதை நேர்த்தி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு மாணவர்கள் நேரடி செயல்விளக்கம் அளித்தனர். இதில் :

பூஞ்சாணக் கொல்லி விதை நேர்த்தி : திரம் (Thiram) அல்லது கார்பாக்சின் (Carboxin) மருந்துகளைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் முறை.

விதை வலுவூட்டல் (Seed Fortification) : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அமிர்தம் கரை சலைக் கொண்டு நாற்றுகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

விதை கடினப்படுத்துதல் (Seed Hardening) : வறட்சியைத் தாங்கி வளர 2% பொட்டாசியம் குளோரைடு (KCl) கரைசலில் விதைகளை ஊறவைத்து நிழலில் உலர்த்தும் முறை.

இயற்கை விதை நேர்த்தி : 1% புங்கம் இலைச் சாற்றைப் பயன்படுத்தி விதைகளின் முளைப்புத்திறனை அதிகரிக்கும் முறை ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கம்!



திருவாரூர், நவ.14

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவிகளால் RAWE (கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம்) திட்டத்தின் கீழ், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், முதல் சேத்தி கிராமத்தில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாணவிகள் ஜீவாமிர்தம் கரைசல் தயாரிக்கும் முறை, அதற்குத் தேவையான பொருட்கள், பயன்படுத்தும் முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு நேரடியாகச் செய்து காட்டி விளக்கினர். மேலும், நெற்பயிரில் காணப்படும் இலைப்பேன் (Thrips) பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் நீல நிற ஒட்டும் பொறி (Blue Sticky Trap) தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை இடுபொருட் களின் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

மேலும், இத்தொழில்நுட்பங்களை விவசாயிகள் தங்களது வயல்களில் பின்பற்றுவதன் மூலம் குறைந்த செலவில் நிலையான வேளாண்மையை மேற்கொள்ள முடியும் என விளக்கப்பட்டது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

மண் மாதிரி சேகரிப்பு பற்றி வேளாண் மாணவர்கள் செயல்விளக்கம்



திருச்சி, நவ.14

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில், நாளந்தா வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் செ.ஆதித்யன், பெ.அன்பழகன், செ.தேவ அபிசேக், க.தினேஷ், வி.மதுபாலன், செ.நிரஞ்சன், சு.ராஜேந்திர பிரசாத், அ.விஜயசாரதி, ரா.விஜேஷ், அ.விமல்ராஜ் மற்றும் கு.விஷ்ணு பிரசாத் ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் துணைப்பிரிவாக, பூவாழூர் கிராமத்தில் மண் மாதிரி சேகரிப்பு பற்றி விவசாயிகளுக்கு மாணவர்கள் செயல்விளக்கம் செய்தனர். மண் மாதிரி சேகரிக்கும் முறை, சேகரித்த மண் மாதிரியை ஆய்வகத்திற்கு எவ்வாறு அனுப்பி வைக்க வேண்டும் என்பது பற்றியும் மற்றும் இந்த ஆய்வின் பயன்பாடுகள் குறித்தும் வேளாண் கல்லூரி மாணவர் ரா.விஜேஷ் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஊரக மதிப்பீடு விழிப்புணர்வு முகாம் நடத்தி வேளாண் கல்லூரி மாணவர்கள்



திண்டுக்கல், நவ.14

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியை சார்ந்த ந.புதுப்பட்டி, நடுமண்டலம் பகுதியில் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவ, மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், கிராம பொது மக்களிடையை ஊரக மதிப்பீட்டு விழிப்புணர்வு முகாமை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் கிராம மக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் தீவிர பங்கேற்புடன் பல்வேறு கருவிகளான சமூக வரைபடம், வள வரைபடம், பருவகால அட்டவணை மற்றும் பிற மதிப்பீட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் கிராமத்தின் சமூகபொருளாதார நிலை, இயற்கை வளங்கள், விவசாய சூழல், அடிப்படை வசதிகள் மற்றும் கிராம மக்களின் தேவைகள், பிரச்சினைகள் குறித்து தகவல்கள் சேகரிக்கப் பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வீரணாம்பாளையத்தில் பெண்களுக்கு சுய உதவிக் குழுக்கள் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம்!



நாமக்கல், நவ.14

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்திற்குட்பட்ட வீரணாம் பாளையம் கிராமத்தில், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கரூர் (AC&RI) சார்பில் 6 மாணவர்கள் இணைந்து விவசாயிகளுக்கான விழிப் புணர்வுக் கூட்டத்தை நடத்தினர். வீரணாம்பாளையம் ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏராளமான பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பெண்களுக்கான சுய உதவிக் குழுக்களை எவ்வாறு உருவாக்குவது, உறுப்பினர் களைத் தேர்வு செய்வது, குழுவின் செயல்பாடுகள், சேமிப்பு முறைகள் மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து மாணவர்கள் விளக்கினர். மேலும், சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களின் பொருளாதார முன்னேற்றம், சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள், நிதிச் சுயசார்பு மற்றும் கூட்டாகச் செயல்படுவதன் நன்மைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத் தினர். இந்நிகழ்ச்சிக்குத் தேவையான இடவசதி மற்றும் ஏற்பாடு களை செய்ய ஊராட்சி அலுவலக எழுத்தர் ராஜேந்திரன் உதவினார். இக்கூட்டம் கிராமப்புறப் பெண்களிடையே சுய உதவிக் குழுக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

காளான் வளர்ப்புக்கான தொழிற்நுட்ப பயிற்சியில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்



ஈரோடு, நவ.14

ஆப்பக்கூடல் பகுதியைச் சேர்ந்த குமரகுரு வேளாண்மைக் கல்லூரி மாணவியர் இந்துஜா.ம, ஸ்வேதா.வ, சாருசரிதா.செ, வின்சி ஜாஸ்மின்.வி, பவித்ரா.ல, தீக்ஷிதா.பா, ஆகியோர் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) ஈரோடு மாவட்டம், பவானி சாகர் வட்டாரத்தில் தங்கி மேற் கொண்டுள்ளனர். இதன் ஓர் அங்கமாக புங்கார் கிராமத்தில் 30/10/26 அன்று விவசாயிகளுக்குக் காளான் வளர்ப்புக்கான தொழிற்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம். இதில் பவானி சாகர் வட்டார தோட்டக் கலை விரிவாக்க அலுவலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தோட்டக்கலை மாணவர்களின் விவசாயிகளுக்கான களப்பயிற்சி

வேலூர், நவ.14

ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள் சார்பில், வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் வட்டாரத்தில் விவசாயிகளுக்கான களப்பயிற்சி நடைபெற்றது. இதில் எருக்கம் இலைகளைப் பயன் படுத்தி இயற்கை பூச்சி மேலாண்மைக்கான திரவம் தயாரிக்கும் முறையை மாணவர்கள் செயல்விளக்கமாக எடுத்துரைத்தனர்.





மேலும், அதன் தயாரிப்பு நிலைகள், தேவையான மூலப் பொருட்கள், வடிகட்டுதல் முறை மற்றும் பாதுகாப்பான கையாளுதல் குறித்து விளக்கினர். இயற்கை இடுபொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த விவசாய முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

வேலூர் கிராமத்தில் நீமாஸ்திரம் தயாரித்தல் குறித்த செயல்விளக்கம்



திருவாரூர், நவ.14

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் உள்ள வேலூர் கிராமத்தில், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நீமாஸ்திரம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வேப்பிலை, வேப்பங்கொட்டை, பசுமாட்டுச் சாணம் மற்றும் பசுமாட்டுச் சிறுநீர் ஆகியவற்றைப் பயன்படுத்தி நீமாஸ்திரம் தயாரிக்கும் முறை விளக்கப்பட்டது. மேலும், பயிர் களைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இதன் பங்கு மற்றும் பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் இச்செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!